பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 18 சனிக்கிழமை (1-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 66

# புலிகளின் அதிரடித் தாக்குதல்களில் ஒரு மாதத்தில் 174 படையினர் பலி!

## போர்த் திட்டங்கள் குறித்து ராணுவம் மறுபரிசீலனை செய்யும்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 1

கடந்த (ஜனவரி) மாதத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் மொத்தம் 174 அரச படையினர் உயிரிழந்தனர். 200 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இதனால் இராணுவ வட்டாரங்களில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அந்தத் தாக்கத்தின் பலனாக, விடுதலைப் புலிகள் பற்றிய தமது மதிப்பீடு தவறு என்று இராணுவ உயர்பீடங்கள் உணர்ந்துள்ளன. அதன் விளைவாக ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ள போர்த் திட்டங்களை மறு பரிசிலனை செய்ய வேண்டிய அவசியம் அவற்றுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது.

ஜனவரி மாதம் என்றுமில்லாதபடி விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்தன, இம்மாதம் ஒட்டுமொத்தமாக 19 தாக்குதல்களைப் புலிகள் நடத்தினர்.

அதிரடித் தாக்குதல்களில் மட்டும் 134 அரச படையினர் பலியாகினர். திருகோணமலை சீனக்குடா விமானத் தளத்தில் இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்பு விமானப் படைக்கு பேரிழப்பை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்தில் 40 விமானப்படையினர் கொல்லப்பட்டனர். 100க்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

### நவீன ஆயுதங்கள்

இந்த வாரம் அம்பாறையில் நிகழ்ந்த கண்ணி வெடிச் சம்பவத்தில் 30 படையினர் பலியாகினர். இந்தத் தாக்குதலில் 110 நவீன ரகத் துப்பாக்கிகளும் விடுதலைப் புலிகளி

[6 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்ப இந்திராவின் மருமகள் நவீன சங்கமித்தையாக மாறும் நோக்கமோ...!

## 35 இலங்கை மாணவர்கள் அகதிகளாக மாஸ்கோவில்

ஜோர்ஜியா நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்களில் அகப்பட்டு, தங்கள் உடைமைகளை இழந்த 35 இலங்கை மாணவ, மாணவிகள் ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த இவர்களில் பெரும்பாலோர் புலமைப் பரிசில் பெற்று உயர்கல்வி பெற அங்கு சென்றவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜோர்ஜியா தலைநகரான ரிபிலிஸியில் இருந்து மாஸ்கோவுக்கான ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் புறப்பட்ட கடைசி ரயிலில் ஏறி இவர்கள் வெறுங்கையுடன் மாஸ்கோ வந்தடைந்தனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. [இ-எ]

## தீவுபகுதிக்கு மேலும் 200பேர் அழைத்துச் செல்லப்படுவர்

அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய தீவுப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 200 பேர் விரைவில் கப்பல் மூலம் அங்கு அழைத்துச் செல்லப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் சொந்த அலுவல்களின் நிமித்தம், யாழ்ப்பாணம் வந்து மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாதிருந்தவர்கள் ஆவர்.

பெரும்பாலும் அடுத்த வார மளவில், இவர்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரின் அனுசரணையுடன் அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் நடந்து வருவதாகத் தெரியவருகிறது. [ஓ-3]

## யாழ். வரப் பயந்து சிப்பாய் தற்கொலை!

கொழும்பு, பெப். 1

விடுமுறையில் சொந்த ஊருக்குச் சென்ற சிப்பாய் ஒருவர் தம்மை யாழ்ப்பாணம் அனுப்பி விடுவார்கள் என்ற பீதியால் கிருமிநாசனி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

தென்னிலங்கையைச் சேர்ந்த ஏப்பாகந்த கிராமத்தில் உள்ள மொரமண்டிய என்ற குடியேற்றத் திட்டத்தில் இச் சம்பவம் நடந்ததாக கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்கொலை செய்து கொண்ட சிப்பாயான ஏ. ஏ. ஜி. நிஹால்குமார [வயது 23] மூதூரில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் பணிபுரிந்தவர்.

விடுமுறையில் மூதூரில் இருந்து வந்த தமது மகன், இம்முறை கடமைக்குப் போனால் யாழ்ப்பாணம் போகவேண்டி வரும் என்று அடிக்கடி கூறி வந்தார் என்றும், இதனாலேயே அவர் கிருமிநாசனி அருந்தியிருக்கலாம் என்றும், தந்தையான ஏ. ஏ. குணதிலக மரண விசாரணையின் போது தெரிவித்திருந்தார். [இ-10]

## அரச மரக் கன்றுடன் வந்த மேனகா!

கொழும்பு, பெப். 1

கொழும்புக்கு விஜயம் செய்துள்ள இந்தியாவின் முன்னாள் அமைச்சர் திருமதி மேனகா காந்தி தம்முடன் அரச மரக் கன்று ஒன்றையும் கொண்டு வந்துள்ளார்.

நேற்று கொழும்பு பேரை ஆற்றின் அருகே உள்ள கங்கா ராமய விகாரை வளவில் நடந்த வைபவம் ஒன்றின் போது தாம் கொண்டு வந்த அரச மரக்கன்றை அங்கு நட்டார். [இ-எ]

## கர்நாடகத்தில் தமிழ் அமைச்சரின் வீட்டில் குண்டு!

பெங்களூர், பெப். 1

கர்நாடக மாநில அரசில் கலாசார அமைச்சராகப் பதவி வகிக்கும் தமிழரான ரமேஷ் என்பவர் பெங்களூரில் கட்டிய புதிய வீட்டுக்கு கடந்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

### ராஜீவ் கொலை வழக்கு:

## பிரபாவையும் பொட்டு அம்மானையும் சரணடையுமாறு நீதிமன்றம் உத்தரவு

சென்னை, பெப். 1

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன், புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் ஆகிய இருவரும் இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன் நீதிமன்றத்தில் சரண் அடைய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கை விசாரித்து வரும் தனி நீதிபதி எஸ். எஸ். சித்திக் இதற்கான ஆணையை நேற்றுப் பிறப்பித்தார்.

இந்த வழக்கைப் புயனாய்வு செய்து வரும் மத்திய சிறப்புப் புலனாய்வுப் பிரிவு தாக்கல் செய்த ஒரு மனுவில், பிரபாகரனும் பொட்டு அம்மானும் இந்த படுகொலைக்குரிய தண்டனை பெறத் தக்கவர்கள் என்று கூறப்பட்டிருந்தது.

இவர்கள் இப்படி சரணடைய வேண்டும் என்ற ஆணையை வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் தெரியப்படுத்த வேண்டும், பிரபல தமிழ் தினப் பத்திரிகை ஒன்றிலும் ஆங்கில தினசரி ஒன்றிலும் விளம்பரம் செய்ய வேண்டும் என்றும் நீதிபதி ஆணையிட்டிருக்கிறார்.

இலங்கைப் பத்திரிகைகளி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஸ்ரீலங்கா கடற்படை தளபதி சரத் பவாருடன் சந்திப்பு

புதுடில்லி, பெப். 1

இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளாரன்ஸ் பெர்னாண்டோ நேற்று முன்தினம் புதுடில்லியில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. சரத்பவாரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இருநாட்டுக் கடற்படைகளும் கூட்டுச் சேர்ந்து இயங்குவது, ரோந்து செல்வது என்பன குறித்தும்—

கடற் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்து அவர்களைத் தடுப்பது குறித்தும்—இருவரும் ஆராய்ந்தனர் எனத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்புக்கு முன் இந்திய கடற்படைத் தளபதியையும் கிளாரன்ஸ் பெர்னாண்டோ சந்தித்திருந்தார். [அ 5]

### 'தடா' சட்டத்தின் கீழ்

## தி. மு. க. கோபாலசாமியும் விரைவில் கைதாகலாம்!

சென்னை, பெப். 1

பயங்கரவாத தடுப்புச்[தடா] சட்டத்தின் கீழ் தி. மு. க. பிரமுகர்களான வை. கோபாலசாமி எம். பி., கலைஞர் கருணாநிதியின் மகன் மு. க. அழகிரி மற்றும் மலர்மன்னன் ஆகியோர் விரைவில் கைதாகலாம் என்று இந்திய சஞ்சிகை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்மநாபா கொலை தொடர்பாக முன்னாள் அமைச்சரான திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி மூவர் உட்பட மேலும் சிலர் கைது செய்யப்படலாம் என்று மத்திய புலனாய்வுப் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. [ஓ]

### உள்ளே ..

பக்கம் 3 ⟶
★ அரந்தலாவை கண்ணி வெடி மேலதிக விவரம்

பக்கம் 5 ⟶
★ ராணுவத் தீர்வை மன்னிக்க முடியாது

★ உலக யுத்தம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், பெப் 1
விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், இன்று சனிக்கிழமை கலை, இலக்கியத் துறை சார்ந்த கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

நெல்லியடி மகா வித்தியாலயம் — ''அறுபது ஆண்டுகளுக்கு முந்திய யாழ்ப்பாணம்''— திரு. க. சி. குலரத்தினம் (பிற்பகல் 3-00 மணிக்கு)

சாவகச்சேரி இந்து கல்லூரி— ''ஓர் இலக்கியவாதியின் இன உணர்வுகள்''— திரு. ஐ. சாந்தன் (பிற்பகல் 2-30 மணிக்கு)

மல்லாகம் மகா வித்தியாலயம்— ''எமது போராட்டத்தில் கலை, இலக்கியங்கள் ஆற்ற வேண்டிய பங்கு''— திரு. புதுவை இரத்தினதுரை (காலை 9-00 மணிக்கு)

குருநகர் கடற்புலிகள் பிரிவு— ''கிராமியக் கலைகள் (நாடகம்)— திரு. ஏ. ரி. பொன்னுத்துரை (பிற்பகல் 3-00 மணிக்கு)

[இ]

# டேவிட் கிளாட்ஸ்ரனுக்கு உக்ரைன் தூதுவர் பதவி!

லண்டன், பெப். 1
உக்ரைன் நாட்டிற்கான பிரிட்டிஷ் தூதராக திரு. டேவிட் கிளாட்ஸ்ரன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் கடைசியாக ஸ்ரீலங்காவில் பிரிட்டிஷ் தூதராகப் பணியாற்றியவர். உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டதாகத் தெரிவித்து, இவரை நாட்டை விட்டு வெளியேறுமாறு கொழும்பு அரசு உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் சோவியத் யூனியனில் இரண்டாவது பெரிய மாநிலக் குடியரசான உக்ரைன் அண்மையில் தனி நாடாகியது தெரிந்ததே.

[உ-எ]

# திருமலை -அனுராதபுரம் வீதி இன்று முதல் பாவனைக்கு!

கொழும்பு, பெப். 1
திருகோணமலை—அனுராதபுரம் வீதி இன்று (பெப்ரவரி1) தொடக்கம் போக்குவரத்திற்கு மீண்டும் திறந்துவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் சகல பஸ்களும் திருகோணமலை—அனுராதபுரம் வீதியையே பயன்படுத்த வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் சிறி பீரிஸ் உத்தரவிட்டிருக்கிறார்.

பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்னர் திருமலைக்கும் முதலிக்குளத்திற்கும் இடைப்பட்ட ஆறுமைல் தூரம் பாதுகாப்புடன் போக்குவரத்துச் செய்யக் கூடியதாக மாற்றப்படும் என்று பிரிகேடியர் பீரிஸ் திருமலையில் நடந்த மாநாடு ஒன்றில் தெரிவித்திருந்தார்.

[உ-எ]

## ஐவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 1
மன்னார் மற்றும் பூநகரிப் பகுதிகளில் இடம்பெற்ற 'வலம்புரி' இராணுவ நடவடிக்கையின்போது கைதானோரில் ஐந்து பொதுமக்கள் 26 ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்டோர் வருமாறு:-

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த மயில்வாகனம் தெய்வேந்திரம் [56 வயது], சாவகச்சேரியைச் சேர்ந்த முருகேசு கந்தசாமி [45 வயது], செல்லத்துரை சபாரத்தினம் [85 வயது], திருமதி சபாரத்தினம் சிவபாக்கியம் [78 வயது], சின்னத்தம்பி கணபதி [74 வயது] (ஒ)


Jaffna College
Institute of Technology
Vaddukoddai

மரவேலை, கட்டட வேலை
**பயிற்சி நெறிகள்**

அகில உலக கெயர் ஸ்தாபனத்தின்
(Care International) உதவியுடன்
இலவச பயிற்சி நெறிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன

காலம் 2½ மாதங்கள்

ஒழுங்கான பயிலுனர்க்கு:
1. நாளாந்த ஊக்குவிப்புப் படியாக ரூபா 30/- வழங்கப்படும்.
2. ஆரம்பப் பயிற்சியின் பின் 10 மாதங்கள் வேலைத் தளங்களில் தொழில் பயிற்சி.
3. பயிற்சி முடிவில் இலவச உபகரணப் பொதி.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் நேரிலே வந்து யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை காரியாலயத்தில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 06—02—1992
நேர்முகப் பரீட்சை: 07—02—1992 முற்பகல் 9-00 மணி
பயிற்சி ஆரம்பம்: 10—02—1992

- பணிப்பாளர்.

[சி-1464]


# குருநகர் இளைஞர் ஜேர்மனியில் பலி

குருநகர், பெப். 1
ஜேர்மனியில் நடந்த கத்திக்குத்துச் சம்பவம் ஒன்றில் குருநகர் இளைஞர் ஒருவர் மரணமானார்.

பிரஸ்தாப இளைஞரை, யாழ்ப்பாண வாசி ஒருவரே குத்திக் கொலை செய்தார் என்று இங்கு தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலையுண்டவர் குருநகர் புதிய கடற்கரை வீதியைச் சேர்ந்த மிக்கேல்பிள்ளை சூரி (25 வயது) என்பவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-51)

# புதிய பெயரில் ''டாஸ்'' செய்தி ஸ்தாபனம்

டாஸ் செய்தி ஸ்தாபனம் இனி புதிய பெயரினால் அழைக்கப்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். ஆங்கிலத்தில் ITAR என்று இனிமேல் அது அழைக்கப்படும் என்று அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

Information and Telegraph Agency of Russia என்பதன் சுருக்கமே ஐ.ரி.ஏ.ஆர் என்பதாகும். [த-எ]

# பாகிஸ்தானுக்கு உதவி இல்லை

1993 ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு பொருளாதார மற்றும் நிதி உதவிகள் அமெரிக்காவினால் வழங்கப்பட மாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் பாகிஸ்தானுக்கு உதவி அளிப்பது பற்றி திரு. புஷ்ஷினால் எதுவுமே தெரிவிக்கப்படவில்லை. [இ-எ]

# மருத்துவ சேவையில் பயிற்சியாளர் பதவிகள்

## போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு

கொழும்பு, பெ. 1
துணை (பரா) மருத்துவ சேவை மற்றும் இடைநிலை தொழில் நுட்ப சேவைகளுக்குப் பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை ஒன்றை நடத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் கோரியுள்ளார்.

விண்ணப்ப முடிவு திகதி எதிர் வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியாகும். இது பற்றிய விவரங்கள் இம் மாதம் 17 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன.

கண் பரிசோதனை உதவியாளர், மருந்தக உதவியாளர், மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர், மருத்துவ உடற்பயிற்சியாளர், எக்ஸ்றே தொழில் நுட்பவியலாளர், பற்சிகிச்சை தொழில் நுட்பவியலாளர் ஆகிய 'பரா' மருத்துவ சேவைகளுக்கும் மற்றும் இடைநிலை தொழில் நுட்ப சேவைகளுக்குமே பயிற்சியாளர்கள் இப் போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடைபெறவுள்ள இப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்குத் திறமை மற்றும் இன விகிதாசார அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

[ஒ-எ]

# புலிகளே காரணமாம்

கொழும்பு, பெப். 1
கல்முனை, காத்தான்குடிப் பகுதிகளில் நேற்று முன்தினம் சைக்கிள்களில்பொருத்தப்பட்ட குண்டுகள் வெடித்த சம்பவங் [illegible] காரணம் என்று ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

[உ-எ]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்துரை செல்லத்தங்கம்

வேலணை மேற்கு இன்புலத்தைச் சேர்ந்த வரும் தற்போது இல. 3, யாழ். வீதியில் வசித்தவரும் அமரர் மருதையனார் சின்னத்துரையின் மனைவியுமான செல்லத்தங்கம் காலமானார்

அன்னார் அமரர் இராஜேஸ்வரன், தவராசா [புடைவை வியாபாரம் நவீன சந்தை], இராஜேஸ்வரி, ஞானேஸ்வரன் [ஆசிரியர் ஊர்காவற்றுறை கொத்தணி], ஆகியோரின் தாயாரும், வேதவதி, அமரர் துரைராசா [தாவடி], தவமலர் [பேபி], ஆகியோரின் மாமியாரும், செல்வி தட்சாயினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [01-02-92] 12 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
ஞானேஸ்வரன்.
[மகன்]

இல; 3, யாழ். வீதி,
யாழ்ப்பாணம். [19551]

## திருமதி காமாட்சியம்மா தம்பிராசா

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி காமாட்சியம்மா தம்பிராசா 31-1-92 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல கொழும்பு வர்த்தகர் ஆறுமுகம் தம்பிராசாவின் அன்பு மனைவியும், திருமதி தயாநிதி, திருமதி சாந்தினி [ஆசிரியை, யா/வண். நாவலர் மகா வித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகரெத்தினத்தின் வளர்ப்புத் தாயாரும், காலஞ்சென்ற சச்சிதானந்தசிவம் [சட்டத்தரணி, முன்னைநாள் தபால் அதிபர்], பழனிவேற்பிள்ளை [கணக்காளர்] ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, முத்துக்குமாரு, பரமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லத்துரை, செல்லாச்சிப்பிள்ளை, செல்லம்மா, ஞானாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், பத்மஜா [ஆசிரியை], திருமாவளவன், மிருனாளினி, கரிகால்வளவன், தயாளினி, அனபாயவளவன், தனுஜா, சுதர்மன், சுகன்ஜா, தாரிணி, சுதர்சன், அச்சுதன், சிவந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
திரு. சு. பழனிவேற்பிள்ளை
குடும்பத்தினர்

186/14, பருத்தித்துறை வீதி,
குருநாதசுவாமி கோவில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [19550]

## திரு. ஆர். கே. மான் [Mann குழந்தை]

[இளைப்பாறிய சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்]

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. றொபேட் கனகரட்ணம் மான் அவர்கள் 92-1-31ஆம் திகதி காலமானார். இவர் காலம்சென்ற திருமதி மக்டலின் அன்னமுத்துவின் அன்புக் கணவரும், தவமணி, ஜெயராணி, ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காசிப்பிள்ளை [நில அளவையாளர்], ஜெயராசா [உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 1992-2-1 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்குச் சுண்டுக்குளி, கோவில் வீதி ஒழுங்கை 31 ஆம் இலக்க இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காகப் பரி. யோவான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
மு,அ. ஜெயராஜா
[மருமகன்]

31, கோவில் வீதி ஒழுங்கை,
சுண்டுக்குளி. (19553)

## திருமதி சின்னத்துரை பாக்கியம்

திருமதி சின்னத்துரை பாக்கியம் இயற்கை எய்தி விட்டார். அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி சின்னத்துரையின் அன்பு மனைவியும், துரைசிங்கம், அன்னலட்சுமி, ஜெகசோதிமலர், சண்முகலிங்கம், இரத்தினசிங்கம் (ஜேர்மனி), சிவராசா (ஜேர்மனி), சுந்தரலிங்கம், அன்னலிங்கம் (U. K.), ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், ந. செல்லத்துரை (இலங்கை போக்குவரத்துச் சபை), மகேந்திரராசா, பரமேஸ்வரி, வரலட்சுமி, சத்தியமூர்த்தி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியும், தயாநிதி, கமலகாசன், அருட்செல்வன், சிவச்செல்வன், தவச்செல்வன், யாமினி, குமுதினி, சாந்தினி, பிரதிபன், சைதா, மலர்மதி, சுகந்தன், நிமலன், தினேஸ், சந்துஸ்ஷா ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார். அன்னாரினது இல்லத்தில் ஈமக்கிரியைகள் இன்று (1-2-92) காலை 10.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

வராலி கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (19545)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரந்தலாவை கண்ணிவெடிச் சம்பவம்:

# மனித சதைகளும் கிழிந்த துணிகளும் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன!

## மரணவிசாரணையில் சாட்சியம்

கொழும்பு, பெப். 1

''அரந்தலாவை கண்ணிவெடிச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் கண்ணிவெடியில் சிக்கிய பஸ் சுக்குநூறாகிக் கிடந்தது. மரங்களில் இரத்தக்கறை படிந்த உடைகளும், மனித சதைத்துண்டங்களும் தொங்கிக் கொண்டிருந்தன.''

அரந்தலாவைச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் மகாஓயா பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுனில் பிரேமச்சந்திரா இவ்வாறு கூறினார்.

அம்பாறை மாவட்ட நீதிபதியும், நீதிவானுமான ஜி. டி. குலதிலக நேற்று முன்தினம் மரண விசாரணைகளை நடத்தினர்.

அங்கு சாட்சியமளிக்கையில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் கூறியதாவது:-

நிலக்கண்ணி வெடிச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டதும், சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்தோம். அப்போது புல்லுமலைப் பகுதியில் சில தீவிரவாதிகளுடன் மோத வேண்டியிருந்தது.

இராணுவத்தினர், கடற்படையினர் உதவியுடன் காயமுற்றவர்களை நாங்கள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தோம்.

கண்ணிவெடி வெடித்த இடத்தில் — வீதியின் மத்தியில் — பாரிய குழி ஒன்று காணப்பட்டது.

பொலீஸ் கோஷ்டி ஒன்று அருகில் உள்ள காட்டுப்பகுதியில் இராணுவத்தின் உதவியுடன் தேடுதல் நடத்தியது. சுமார் 300 மீற்றர் தூரம் காட்டுக்குள் 'வயர்கள்' செல்வதைக் கண்டோம். இச்சம்பவம்] நடைபெறுவதற்கு முன்னர் தீவிரவாதிகளின் நடமாட்டம் அப்பகுதியில் இருந்ததற்கான அடையாளங்கள் காணப்பட்டன— என்றார்.

வெடி விபத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும், இரத்தப் பெருக்கினாலும் மரணங்கள் ஏற்பட்டதாக நீதிபதி தீர்ப்பளித்தார். (உ)

## மானிப்பாய் மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா

மானிப்பாய் மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி தே. சுந்தரலிங்கம் பரிசில்கள் வழங்குவார். (இ-3)

## 3 ஆவது தொகுதி அகதிகள் 5 ஆம் திகதி வந்து சேருவர்

யாழ்ப்பாணம், பெப். 1

தமிழகத்திலிருந்து புறப்படும் மூன்றாவது தொகுதி ஈழத் தமிழ் அகதிகள், எதிர்வரும் 5 ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்தை வந்தடைவர்.

புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளர் கிறிஸ்டி சில்வா இத்தகவலைத் தெரிவித்தார்.

இதுவரை இரண்டு தொகுதிகளில் 279 குடும்பங்களைச் சேர்ந்த 1,273 அகதிகள் தாயகம் திரும்பியிருக்கின்றனர் என்றும்—

கடந்த 21 ஆம் திகதியன்று திருமலை வந்துசேர்ந்த முதல் தொகுதி அகதிகளில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்தோர் மட்டுமே இன்னும் உப்புவெளி அகதி முகாம் ஒன்றில் தங்கி உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# அம்பாறை-மகாஓயா வீதி நெடுகிலும் அகழி வெட்டும் வேலை ஆரம்பம்

### கண்ணிவெடியிலிருந்து தப்ப 500 பேர் வேலை

கொழும்பு, பெப். 1

அம்பாறை - மகா ஓயா வீதியின் இரு மருங்குகள் நெடுகிலும், அகழிகளை வெட்டும் வேலையை பாதுகாப்புப் படையினர் ஊர்காவல் படையினரின் ஒத்துழைப்புடன் ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்த வேலையில் குறைந்தது 500 பொதுமக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றி அப்புறப்படுத்தும் நோக்குடனேயே இவ்வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதாம்!

கடந்த ஞாயிறு அரந்தலாவையில் இடம்பெற்ற கண்ணிவெடி விபத்தைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதாம். (உ-எ)

## 10 பேரை இன்னும் காணவில்லை

சீனக்குடா வெடிகுண்டுச் சம்பவத்தில் அங்கிருந்த பத்து விமானப் படையினரது கதி என்னவாயிற்று என்பது இதுவரை தெரியவரவில்லை. அவர்களது சடலங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க இத்தகவலை வெளியிட்டார்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 24 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் அவர் உறுதிப்படுத்தினார். [அ-5]

இராணுவத்தினர் திடீர் தாக்கு!

## நொச்சிமோட்டையில் பயணிகள் 'அருந்தப்பு!'

வவுனியா, பெப். 1

கடந்த புதன்கிழமை காலை வடபகுதியில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற பயணிகள், நொச்சிமோட்டையில் வைத்து இராணுவத்தினர் நடத்திய திடீர் தாக்குதலில் மயிரிழையில் உயிர்தப்பினர்.

வடபகுதியில் இருந்து செல்லும் பயணிகள் இராணுவ சோதனைக்காக நொச்சிமோட்டையில் காத்து நிற்பதும்—

இராணுவத்தினர் சமிக்ஞை காட்டியதும், அவர்கள் தடைமுகாமை நோக்கிச் செல்வதும் வழமையாக இடம்பெற்று வரும் நிகழ்ச்சியாகும்.

கடந்த புதன்கிழமை காலை 8-30 மணியளவில் வழமைபோல் இராணுவ சோதனைக்கான — சமிக்ஞையை எதிர்பார்த்து— பயணிகள் நின்ற போது, திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது. ஒதுங்க இடமில்லாத நிலையில் பயணிகள் நொச்சிமோட்டைப் பாலத்தின் கீழ் தஞ்சமடைந்தனர்.

தூரத்தில் இருந்து பார்த்த படையினர் பாலத்தின் கீழ் சந்தேகத்துக்கு இடமான நடமாட்டம் தென்படுவதாக நினைத்து, ஷெல்தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் ஆரம்பித்தனர்.

மழையும் ஓய, ஷெல்தாக்குதலும் நிற்க பாலத்தின் கீழ் பதுங்கிய பயணிகள் வெளியே வரத் தொடங்கினார்கள்.

'பாலத்தின் கீழ் ஏன் ஒதுங்கினீர்கள்?' என்று கேட்டு படையினர் பயணிகளை பின்னர் மிரட்டினராம். (உ-எ)

## லலித்அணியின் புதிய கட்சி 10 ஆம் திகதி தொடங்குகிறது

கொழும்பு, பெப். 1

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரிலான புதிய அரசியல் கட்சியின் அங்குரார்ப்பண வைபவம் இம்மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவிருக்கிறது.

முன்னாள் அமைச்சரும் இக்கட்சியின் பிரமுகருமான திரு. அத்துலத் முதலி இத்தகவலை வெளியிட்டார்.

அன்றைய தினம் புதிய கட்சியின் அங்குரார்ப்பண வைபவம் தொடர்பான பௌத்த மத நிகழ்ச்சி அனுராதபுரத்திலும்—

இந்து மத நிகழ்ச்சி கொழும்பிலும்—

இஸ்லாமிய மத நிகழ்ச்சி புத்தளத்திலும்—

கத்தோலிக்க மத நிகழ்ச்சி நீர்கொழும்பிலும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. அத்துலத் முதலி கூறினார். [உ-எ]


மில்க்வைற் சலவைத்தூள்
உங்கள் சலவையைத்
துரிதமாகவும்,
தூய வெண்மையாகவும்
செய்கிறது.




50 கிராம் பக்கற் ரூபா 5/- மட்டுமே

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

[சி-1379]



இணுவில்

★ எவரெஸ்ற் ★

கல்வி நிலையம்

திருமுறை விழா சிறப்புற

வாழ்த்துகிறோம்

இடம்: இணுவில் கந்தசுவாமி கோவில்-
இளந்தொண்டர் சபை மண்டபம்.

காலம்: 01 — 02 — 1992 [இன்று]
காலை — மாலை

காலை நிகழ்ச்சிகள் 8.00 — 12.00 வரை

காலை 8-00 திருமுறை ஊர்வலம்
9-00 திருமுறைப் பாராதனை

சிறப்புச் சொற்பொழிவு:
— திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை

திருமுறைப் பண்ணரங்கு:
— பாடசாலை மாணவிகள்

மாலை நிகழ்ச்சி 2.00 மணி

சிறப்புச் சொற் பொழிவு:
— திரு. சிவமகாலிங்கம் அவர்கள்

★ 4-00 மணி திருமுறைப் பண்ணிசை அரங்கு ★

பண் ஓதுவோர்:
திரு. சிவஞானசேகரம்
செல்வி நாகம்மா கதிர்காமர்
திரு. பொன். சுந்தரலிங்கம்
திரு. ந. வி. மு. நவரத்தினம்

வயலின்
திரு. ராதாகிருஸ்ணன்
திரு. கேசவமூர்த்தி
செல்வன் கோபிதாஸ்

மிருதங்கம்
திரு. க. ப. சின்னராசா
செல்வன் கஜன்

இளந்தொண்டர் சபை -
இந்து சமய வளர்ச்சிச் சங்கம்,
இணுவில் கந்தசுவாமி கோவில்.

[சி-1461]


## வாராந்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 1

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் வாரார்ந்தக் கருத்தரங்கு தொடரில் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு கவிஞர் [illegible] இலக்கிய [illegible] கள்' என்ற பொருளில் உரை ஆற்றுவார். [இ 3]


எமிலியானுஸ்பிள்ளை தொழில் நுட்பக் கல்லூரி

மரவேலைப் பயிற்சி

தீவுப்பகுதி இளைஞர்களுக்கு அகில உலக கெயர் நிறுவனத்தால் நடத்தப்படவிருக்கும் மரவேலைப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்: 15 வயதுக்கு மேற்பட்டோரும், 8 ஆம் வகுப்புக்கு மேல் படித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

நேர்முகப் பரீட்சை: 07 — 02 — 1992
பிற்பகல் 2.00 மணிக்கு

பயிற்சி ஆரம்பம்: 10-02-92

விலாசம்: எமிலியானுஸ்பிள்ளை
தொழில் நுட்பக் கல்லூரி,
123, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

கொடுப்பனவுகள்: 2½ மாத பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு, மாதம் 600 ரூபா ஊக்குவிப்பு பணமாக வழங்கப்படும்.

விண்ணப்பங்கள்: 06 — 02 — 1992 இற்கு முன் நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- இயக்குனர்.

[19542]]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தனிப் பாவிப்பில் நின்ற C 90, சிவப்பு (திருத்திப் பாவிக்க வேண்டும்) விற்பனைக்குண்டு. கி. ஆனந்தம், தபால் அதிபர், வடக்கு சண்டிலிப்பாய். (19520)

பாவித்த அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடு 8 அடி (நல்ல நிலையில்), எல் அயன் றாக்கை பலகையுடன் 10 அடி x 7 அடி விற்பனைக்குண்டு. மெற்றோ ஸ்ரீல் இன்டஸ்றீஸ், 25/16, கச்சேரி நல்லூர் வீதி, (கச்சேரி செயலகத் தரிப்பிடம் அருகாமை, கச்சேரி.) [19538]

அல்சேஷன் நாய்க்குட்டிகள் (40 நாட்கள்) விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கியது. தொடர்பு: பொ. தில்லைராசா, இல. 55, 3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியன் காடு. (19534)

### புலமைப்பரிசில் வகுப்புகள்

ஆண்டு 5 புலமைப் பரிசில் வகுப்பு புதிய பிரிவு 1-2-92 சனி பி.ப 4-00 மணிக்கு ஆரம்பமாகிறது. குறிப்பிட்ட அளவு மாணவர் சேர்த்துக் கொள்ளப்படுவர். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [19537]

### புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1186)

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (5025)

### சிறுகதைத் தொகுப்பு

25 சிறுகதை எழுத்தாளர்களின் கருத்துமிக்க சிறுகதைகளின் தொகுப்பு ஒன்றினை 'மீரா' வெளியிடவுள்ளது. சிறுகதை எழுத்தாளர்கள் சமகால நிகழ்வுகளை சிறுகதைகளாக்கி அனுப்பி வையுங்கள். 'மீரா' வெளியீடு: 201, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். [19511]

### வினாத்தாள் [ஆண்டு- 4]

ஆண்டு 4 பரீட்சை வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 2-2-92 ஞாயிறு வெளியிடப்படும். பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (19536)

### அம்பாள் திருமண சேவை

Electronic Engineer, Civil Engineer, Accountant, B.Sc., B. A. ஆகிய மணமக்களுக்கு மணப்பெண்கள்தேவை. விண்ணப்ப முற்பணம் ரூபா 50/-. ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (19540)

### கணிதம்

ஆசிரியர் சச்சிதானந்தனின் ஆக்கங்களான 'கணிதம் உதவி நூல் வரிசைகள்' விற்பனையாகின்றன. மடக்கை, விருத்திகள், திரிகோண கணிதம், புள்ளி விபரவியல் ஒவ்வொன்றிலும் பயிற்சி வினாக்களும், செய்கைகளும் அடங்கியவை. ரூபா 20/-. பூபாலசிங்கம் மற்றும் புத்தகசாலைகளில். [4486]

### அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

---

# NEW SCIENCE ACADEMY
JAFFNA.

## 92 A/L PHYSICS

Electricity
(ஓட்டமின்னியல்)

எஸ். சோதிலிங்கம்
B.Sc. (Hons.)

Sat., Sun.
பிரிவு I 6-00—7-00
பிரிவு II 3-30—4-30

ஆரம்பம்:
01-02-1992

[சி-1455]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 27 — 09 — 1917

இறப்பு: 02 — 01 — 1992

## அமரர் I. S. அந்தோனிராஜா

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பேரன்பிற்குரிய எம் தெய்வமே! அன்புத் தந்தையே! உங்கள் பிரிவை ஜீரணிக்க முடியாது ஏங்கித் தவிக்கின்றோம். நீங்கள் எங்களை விட்டுச் சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு என்றும் அகலாது.

எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் பங்கு பற்றி, உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**அன்பு மனைவி, மக்கள்.**

அமலிவனம்,
வட்டக்கச்சி.

[19527]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 08 — 09 — 1919

இறப்பு: 01 — 02 — 1991

அண்ணாவி

## நல்லையா ஜேம்ஸ் இராஜநாயகம்

(இளைப்பாறிய இராணுவ கோப்றல்)

''உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்'' [அரு. 11:25]

அன்பின் உறைவிடமே! தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இவரின் ஆத்ம சாந்திக்காக இன்று [1992-02-01] காலை 6-30 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர், மைத்துனர்மார், மைத்துனிமார், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

12/2, சந்தணமாதா கோவில் வீதி,
பாண்டியன்தாழ்வு.

[19532]

---

தென்னிந்திய திருச்சபை, யாழ். பேராயம்

# தொழிற் பயிற்சி நிலையம்

வட்டுக்கோட்டை.

மேற்படி தொழிற் பயிற்சி நிலையத்தில் தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சு பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை ஆதீனக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 15 - 02 - 1992 இற்கு முன்னர் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

**காரியதரிசி,**
**தென்னிந்திய திருச்சபை.**

ஆதீனக்காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

[சி-1450]

---

# விண்ணுலகில் ஈராண்டு பூர்த்தி



தூல முகிழ்வு: 28 — 12 — 1908

தூல அவிழ்ப்பு: 24 — 01 — 1990

## அமரர் அருணாசலம் செல்லையாபிள்ளை

[முன்னைநாள் இரத்தினபுரி தொழில் மேதை]

### திதி: 01 02 1992

பெற்று வளர்த்து பேணிக்காத்த பெரும் தெய்வமே! தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம் தான் - என்றும் ஐந்து களங்களையும் கவனித்த பெருங் களஞ்சியமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கும்;

**மகிள்: மாசிலாமணி - இராசலிங்கம்- குடும்பம்.**

30/16, அத்தியடி-
குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

[19522]

---

# ஓராண்டு நிறைவு அஞ்சலி



தோற்றம்: 27 — 04 — 1951

மறைவு: 12 — 02 — 1991

சங்கீத வித்துவாட்டி

## கலாநாயகி சூரியகுமாரன்

[யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்]

### திதி: 01 — 02 — 1992

கலா எந்தன் கண்மணியே! காதல் மிகு அம்மாவே!
விலையுயர்ந்த புத்திரியே! வித்தகி எம் மருமகளே!
தலைசிறந்த சோதரியே! தண்ணளிசேர் மைத்துனியே!
கலை நிறைந்த பொக்கிஷமே -
கானமழை பொழிபவளே!
நிலைபிரிந்து போனாயே நினைமறந்து வாழோமே.

**கணவன், புத்திரர், பெற்றோர், சகோதரர், மைத்துனர், சுற்றத்தினர்.**

கட்டப்பிராய் - கோப்பாய்,
யாழ்ப்பாணம்.

[19524]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சமயோசித சமாளிப்பு!

கொக்கட்டிச் சோலையில் குழந்தைகளும், பெண்களும் ஆண்களுமாக அறுபத்தேழு அப்பாவித் தமிழர்களை இராணுவமே கொன்றது, நிலக்கண்ணி வெடியில் படையினர் இருவர் மரணமானதைத் தொடர்ந்து இராணுவத்தினர் மட்டு மீறிய செயலில் இறங்கி அப்பாவி மக்களைக் கொன்றனர்.

இவ்வாறாக, கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் குறித்து விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையை ஏற்றுக் கொள்வதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

வது இராணுவத்தினரே இந்த அரக்கத்தனமான கொலைகளைச் செய்தனர் என்று ஒப்புக் கொண்டிருக்கிறது.

கொக்கட்டிச்சோலைக் கொடுங்கொலைகளை இராணுவத்தினரே செய்தனர் என்பது, விசாரணை மூலம்தான் தெரிய வரவேண்டும் என்பதல்ல. அது வெளிப்படையானது. 67 பேர் மட்டுமல்ல நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டனர் என்பதுதான் உண்மை.

1983 ஜூலை 23 இல் நடந்த திருநெல்வேலிச் சம்பவம் தொடக்கம், கடந்த ஒன்பது வருடங்களில் இராணுவத்தினர் இவ்வாறு ஆயிரக்கணக்கான பழிவாங்குதல்களை நடத்தியிருப்பர். விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் தமது மத்தியில் ஏற்படும் இழப்புகளுக்காக படையினர் நடத்தும் ஷெல் வீச்சு, குண்டு வீச்சு ஆகிய மறைமுகப் பழிவாங்குதல்களையும் சேர்த்தால் எண்ணிக்கை மேலும் உயரும்!

அத்தனை சம்பவங்களிலும் படையினர் தான் அப்பாவித் தமிழர்களைக் (ஆகக் குறைந்தது இருபதாயிரம் பேர்) கொன்றார்கள் என்பது அரசுக்குத் தெரியாதா? அவற்றை எல்லாம் விசாரணை வைத்துத் தான் வெளிக்கொணர வேண்டுமா?

மனித உரிமை மீறலுக்கும், இராணுவச் செலவினத்துக்கும், நிதி உதவிக்கும் தொடர்பை உண்டாக்கி உதவி வழங்கும் நாடுகள் அழுத்தம் போடத் தொடங்கிய பின்னர், 1991 ஜூன் மாதத்தில் கொக்கொட்டிச்சோலைக் கொடுங் கொலைகள் நடந்தன,

எனவே அதற்கு ஒரு விசாரணை மூலம் அறிக்கை; அதனை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுதல்; இராணுவத்தினர் கொலை செய்தனர் என ஒப்புக்கொள்ளுதல் ஆகிய சமயோசித சமாளிப்புகள் திட்டமிட்டு நடத்தப்படுகின்றன!

மனித உரிமை பேணுதல், இராணுவ அத்துமீறலைத் தடுத்தல் - தண்டித்தல் ஆகியவற்றில் அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை உலக நாடுகளுக்குச் சமிக்ஞை காட்டுவதற்காகவே—

அடுத்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் இலங்கைக்கு உதவும் நாடுகள் கூட்டம் பாரிஸில் ஆரம்பமாவதற்கு முன்னர், விசாரணைக் குழு அறிக்கையை அவசரமாக வெளியிடச் செய்து, அதனை அரசு ஏற்றுக்கொள்வதாக தடல்புடலாகப் பிரசாரம் செய்யப்படுகிறது!

மொத்தத்தில் தமிழருக்கு நீதி வழங்குவதைவிட, தனக்கு உதவும் உலக நாடுகளைச் சமாளித்து நிதி உதவி பெறுவதிலேயே அரசுக்கு பிரதான நாட்டம். அதன் பொருட்டு எடுக்கப்படும் ஏமாற்று முயற்சிகளில் கொக்கட்டிச்சோலை விசாரணையும் ஒன்று! அவ்வளவுதான்! உலக நாடுகள் இந்த நாடகத்தைக் கண்டு ஏமாறாதிருந்தால் சரி

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு

# கனடா ஆற்றக்கூடிய பங்கு அறிக்கையில் வெளிவரும்!

கொழும்பு. பெப். 1

இலங்கையின் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் விடயத்தில் கனடாவும் சர்வதேச சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களும் ஆற்றக் கூடிய பங்கு என்ன என்பதை கனேடிய தூதுக் குழு தனது அறிக்கையில் வெளியிடும்.

இலங்கை வந்த கனேடிய மனித உரிமைக்குழு தாயகம் திரும்பியதும் இம்மாதம் 5 ஆம் திகதி ஒட்டாவாவில் வைத்து வெளியிடவிருக்கும் — இலங்கை சம்பந்தமான சிபார்சுகள் அடங்கிய — பூரண அறிக்கையில், மூன்று முக்கிய அம்சங்கள் இடம்பெறும் என்று தெரிய வருகின்றது.

அவையாவன:-

★ மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசு வகுத்துள்ள நடைமுறைகள் மீதான விசேட சிபார்சுகள்.

★ மனித உரிமைகள் விவகாரங்களையும் உதவி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த உறுதிப்பாடுகளையும் இணைக்கும் கனேடிய அரசின் கொள்கை.

★ இலங்கையின் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் விஷயத்தில் கனடாவும் சர்வதேச சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களும் ஆற்றக் கூடிய பங்கு.

இதே வேளை—

பாதுகாப்புப் படைகளினால் தொடர்ந்தும் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக சான்றுகளுடன் கூடிய பூர்வாங்க அறிக்கை ஒன்றை கனேடிய மனித உரிமைகள் குழு கொழும்பு அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

# ராணுவ தீர்வுக்கு முயன்றால் அதனை மன்னிக்க முடியாது

## கனேடிய தூதுக்குழு அறிவிப்பு

கொழும்பு, பெப். 1

''இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு இராணுவத் தீர்வாக இருக்கமுடியாது. இராணுவத் தீர்வைக் காண எத்தனிப்பது பாரிய அளவில் உயிரிழப்புகளை ஏற்படுத்துவதில்தான் முடியும். இதனை மன்னிக்க முடியாது.''

—இவ்வாறு கூறினார் கனேடிய மனித உரிமைகள் குழுவின் தலைவர் அதி வணக்கத்துக்குரிய லூயில் வில்ஸன்.

கனேடிய தூதுக் குழுவினர் கடந்த எட்டு நாட்களாக ஸ்ரீலங்காவில் பல இடங்களிலும் விஜயம் செய்து, மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பான நிலைமைகளைக் கண்டறிந்தனர்.

அதன் பின்னர் கடந்த புதனன்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தூதுக்குழுத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

குழுவினர் வவுனியா, மட்டக்களப்பு, கண்டி, காலி, தங்காலை ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்தனர். கொக்கட்டிச்சோலை, காத்தான்குடி உட்பட பல கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்தனர். இனப்பிரச்சினை, அப்பிரச்சினைக்குத் தீர்வு காணல், யாழ். குடாநாட்டின் நிலைமை ஆகியவை குறித்து பல்வேறு தரப்பினருடனும் பேச்சு நடத்தினர்.

தாயகம் திரும்ப முன்னர் கனேடிய தூதுக் குழுவினர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அதன் தலைவர் மேலும் கூறியதாவது:

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முற்பட்டால், தொடர்ந்தும் அரசியல் விவகாரங்கள் தீர்க்கப்படாமலேயே இருக்கும் நிலை உருவாகும்.

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வைக் காணும் இலக்கை நோக்கி துரிதமாக செயற்படுவதற்கான எண்ணமும், தைரியமும் இல்லாதிருக்கும் அப்பட்டமான நிலையைக் கண்டு நாம் மிகவும் விசனம் அடைகிறோம். — இவ்வாறு உலக கிறிஸ்தவ திருச்சபைக் கவுன்ஸிலின் முன்னாள் தலைவரும் கனேடிய தூதுக்குழு தலைவருமான அதி வண. வில்ஸன் கூறினார். (உ-எ)

## ஜனாதிபதியும் ஒப்புக்கொண்டார்

கொழும்பு, பெப். 1

கொக்கட்டிச்சோலையில் 67 அப்பாவித் தமிழர்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கடந்த ஜூன் மாதத்தில் படுகொலைசெய்த சம்பவத்தை ஸ்ரீலங்கா ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார் என்று ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

கடந்த புதனன்று அமைச்சரவை கூடிய சமயம், திரு. பிரேமதாச இராணுவத்தினரே இந்தப் படுகொலைகளை செய்திருக்கின்றனர் என்று அங்கு கூறினார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## கொழும்பில் அடிமை வர்த்தகம்:

# மலையகச் சிறுவர்களை கடத்தி ரூ. 300க்கு விற்பனை!

கொழும்பு, பெப். 1

மலையகச் சிறுவர்களைக் கடத்திச் சென்று கொழும்பில் அடிமைகளாக விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒருவரைப் பொலீஸார் கைது செய்தனர். அந்த நபரை விளக்க மறியலில் வைக்கும்படி பாணந்துறை மஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

ட்ரவில் தோட்டத்தைச் சேர்ந்த வீரமுத்து வீரன் என்ற நபரே கைது செய்யப்பட்டவராவார்.

இவரால் கடத்தி வரப்பட்டவர்களில் இரு சிறுவர்கள் பொலீஸாரால் மீட்கப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் பன்னப்பிட்டிய சிறுவர் இல்லத்தில் தற்போது சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

ஹல்துமுல்லை கனிஷ்ட பாடசாலையைச் சேர்ந்த எச். எச். எம். சஞ்சீவ, பி. ஏ. எஸ். குணசேகர என்ற 14 வயதுச் சிறுவர்களே மீட்கப்பட்டனர்.

பொரகம சந்தைக்கு நடந்து சென்று கொண்டிருக்கையில் இவர்களை மேற்படி நபர் ஹட்டன் ரயில் நிலையத்திற்கு கடத்திச் சென்று, பயமுறுத்தி கொழும்புக்குக் கூட்டிச் சென்றார் என்றும் —

மொரட்டுவையில் சிறுவர்கள் இருவரையும் 300 ரூபாபடி விற்பனை செய்தார் என்றும் கூறப்படுகின்றது.

இதேபோன்று முன்னரும் பல சிறுவர்களைக் கடத்தி வந்து விற்பனை செய்ததாக அவர் ஒப்புக் கொண்டிருப்பதாகவும்—

அந்தச் சிறுவர்களை தேடிக் கண்டுபிடித்து மீட்கும் முயற்சியில் பொலீஸார் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# கூட்டுறவுச் சங்கங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில்!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 1

''வடக்கு - கிழக்கில் கூட்டுறவுக் கடைகள் யாவும் இயங்குகின்றன. ஆனால் அவை எமது கட்டுப்பாட்டில் இல்லை. அங்குள்ளவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட வேண்டிய நிலையிலிருக்கிறது''.

— உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமராச்சி இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

திருமலை, வவுனியா கூட் [illegible] யைத் தாம் பாதுகாட்டுவதாகவும் அவர் சொன்னார். [உ]

## இணுவிலில் இன்று திருமுறை விழா

தெல்லிப்பழை, பெப். 1

இணுவிலில் இன்று (சனிக்கிழமை) திருமுறை விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. இணுவில் இளம் தொண்டர் சபையின் சைவப்பணிமனை மண்டபத்தில் காலையும், மாலையும் திருமுறை விழா நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

விழாவையொட்டி காலையில் இணுவில் மஞ்சத்தடி சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் இருந்து திருமுறை ஏடுகள் யானையில் விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். இந்த ஊர்வலத்தில் இணுவில் மற்றும் அண்டிய பகுதிகளைச் சேர்ந்த நாதஸ்வர - தவில் கலைஞர்கள் இசை அர்ப்பணம் செய்வார்கள்.

காலை நிகழ்ச்சிகள் கலாநிதி ஆர். விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும். ஆசியுரைகள், சிறப்புச் சொற்பொழிவுகள், பண்ணிசை அரங்கு ஆகியன அவ்வேளை இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சிகள் கலாநிதி சபா. ஜெயராசா தலைமையில் நடைபெறும். ஆசியுரைகள், சிறப்புச் சொற்பொழிவுகளுடன் பிரபல இசையாளர்கள் பங்குபற்றும் திருமுறைப் பண்ணிசைக் கச்சேரிகளும் அப்போது நடக்கும்.

விழாவில் சமய ஓவியக் கண்காட்சியும் இடம்பெற உள்ளது. (அ-68)

## காணிக்கை மாதா தேர் பவனி

காணிக்கை(புதுமை) மாதா தேவாலய வருடாந்த நவநாள் கொண்டாட்டங்கள் கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

நாளை ஞாயிறு மாலை 4 மணிக்கு நற்கருணை ஆராதனை சற்பிரசாத சுற்றுப்பிரகாரம் என்பன நடைபெறும்.

திங்கட்கிழமை [3ஆம் திகதி] அதிகாலை 5-30 மணிக்கு முதல் திருப்பலியும், 7 மணிக்கு திருநாட் பாடல் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

காலை 8 மணிக்கு மாதா சொரூப தேர் பவனி நடைபெறுமென பங்குத் தந்தை வண- டீ. எம். இம்மனுவேல் அடிகள் தெரிவித்தார். [அ-51]

## கூட்டம்

தென்மராட்சி, பெப். 1

சாவகச்சேரி தெங்கு-பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. [இ-117]

# தண்ணீருக்காக யுத்தம் வெடிக்கும்!

டப்ளின், பெப். 1

நீர்வளத்தை அனைவரும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப் பழகிக்கொள்ளாவிட்டால், தண்ணீருக்காக உலகில் யுத்தம் ஒன்றை நடத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அயர்லாந்தின் டப்ளின் நகரில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான ஐ நா. சூழல் பாதுகாப்பு மாநாட்டில் பேசிய ஐரிஷ் சூழல் அமைச்சர் ரோறி ஓ. றன்லோன் முன்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

ஒரு வார காலம் நடைபெறும் இம் மாநாட்டில் நூறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுப்புறச் சூழல் நிபுணர்கள் ஐநூறு பேர் கலந்து கொண்டனர்.

உலகில் வசிக்கும் மக்களில் அரைப் பங்கினருக்கு அதிகமானோர் நீர் தொடர்பான எலும்பு நோய்களால் அவதியுறுகின்றனர். தண்ணீரைத் தூய்மையுடன் பயன்படுத்த உலகம் முன்வராதுபோனால் பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழக்க நேரிடும் என்றும் மாநாட்டில் அவர் சொன்னார்.

உலகில் உள்ள நோய்களில் 90 சத வீதமானவை நீரினாலேயே ஏற்படுகின்றன என்றார் அவர். [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மன்னாருக்கு வந்து சேரும்

# அகதிகளை ஐ. நா. தூதரகம் பொறுப்பேற்க மாட்டாது!

யாழ்ப்பாணம். பெப். 1

இந்தியாவில் உள்ள அகதிகளை மன்னாருக்கு கப்பல் மூலம் அழைத்து வந்தாலும், அவர்களை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் பொறுப்பேற்கமாட்டாது,

படகுகள் மூலம் மன்னாருக்கு தமிழ் அகதிகளை அழைத்து வர இலங்கை - இந்திய அரசுகள் ஏற்பாடுகள் செய்து வருவது தெரிந்ததே.

ஐ. நா. விதிகளுக்கு மாறாகக் கொண்டுவரப்படும் அகதிகளை, தமது மேற்பார்வையில் இயங்கும் பேசாலை, மடு முகாம்களில் தங்க வைக்க அனுமதிக்க முடியாது என்று ஐ. நா. அகதிகளுக்கான தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

[உ-3]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னலக்ஷ்மி விநாசித்தம்பி

நேற்றைய [31-1-1992] அறிவித்தலின் பிரகாரம், அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [1-2-92] சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
சி. துரைராசா
[மருமகன்]

90, ஐயனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(சி-1378)

## திருமதி வள்ளியம்மை இளையப்பு

திருநெல்வேலி வடக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், பணிக்கர்வளவு திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி வள்ளியம்மை இளையப்பு 29-1-1992 புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலம்சென்ற இளையப்புவின் அன்பு மனைவியும், காலம்சென்ற பொன்னம்மாவின் [கொடிகாமம்] அன்புச் சகோதரியும், காலம்சென்ற மாணிக்கம், சின்னத்துரை, காலம்சென்ற சிவகுரு, சதாசிவம் [சபா], கார்த்திகேசு ஆகியோரின் அருமைத் தாயாரும், கந்தையா, பொன்னம்மா, பரமேஸ்வரி, மங்கையர்க்கரசி ஆகியோரின் அருமை மாமியாரும், கதிர்காமநாதன், சிறீஸ்காந்தன் [கனடா], புஷ்பராணி, புனிதவதி, ஜந்தி [யாழ். பல்கலைக்கழகம், நுண்கலைப் பீடம்], ஜனாதினி [வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி - கணிதத்துறை], தர்ஷினி [வேம்படி மகளிர் கல்லூரி - மாணவர் தலைவி], விஜித்தன் [ஜேர்மனி], வினோதன் [சுவிஸ்], நாகநந்தினி ஆகியோரின் அன்புப் பேத்தியும், றாதிகா, முரளீதரன், ஈசன், சுரேசன், சுதர்சன், கார்த்திகா, திலக்ஷன், சிவகணேஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 30-1-1992 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி மயானத்தில் அக்கினியுடன் சங்கமமாகியது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
இ. சதாசிவம் [சபா]

'பணிக்கர் வளவு',
திருநெல்வேலி.

## சோமசுந்தரம் நவரட்ணராஜா

249 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட சோமசுந்தரம் நவரட்ணராஜா [கணணி விரிவுரையாளர் சிங்கப்பூர்], சிங்கப்பூரில் காலமானார். இவர் மாலினி [பாமா] யின் அன்புக் கணவரும் நவஜீவனின் அன்புத் தந்தையும் அமரர் சோமசுந்தரம் இலட்சுமிப்பிள்ளையின் மகனும் அமரர் செல்வத்துரை, மங்கையர்க்கரசியின் மருமகனும், பரமானந்தம், முத்துராஜாவின் சகோதரரும் நளினி [ரூபா], கமலினி [ராஜி], நாகேஸ்வரி, கருணாம்பாளின் மைத்துனரும் கைலாயநாயகி, பரமனாதன், பூலோகநாயகி, குஞ்சிதபாதம், செல்வரட்ணம், ரட்ணதுரை ஆகியோரின் மருமகனும் சந்திராதேவி, பாலச்சந்திரன், தர்ஷணியின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-01-92 இல் சிங்கப்பூரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெ. கலாரஜனி

[19552]

## திருமதி இராசம்மா சின்னத்துரை

நல்லூர் மூத்தவிநாயகர் வீதியைச் சேர்ந்த திருமதி இராசம்மா நேற்று [31-1-92] காலமாகிவிட்டார்.

இவர் சின்னத்துரையின் அன்பு மனைவியும், இராசரெத்தினம், தனபாலசிங்கம், பரஞ்சோதி, திரவியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், மீனலோசனி, மங்கையர்க்கரசி, சண்முகசுந்தரம், ஜெயரெட்ணம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 1-2-92 [இன்று] சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. பஞ்சாட்சரலிங்கம்
[கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்]

(19556)

மரண அறிவித்தல்கள் இரண்டாம் பக்கத்திலும்

## ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 1

தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம், தேசிய ஆசிரியர் ஒன்றியம், கோப்பாய் பலாலி பயிற்சி ஆசிரியர் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறும். [இ]

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 1

கோண்டாவில் வடக்கு ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையம் நடத்தும் மேஜர் "மைக்கன்றோ" ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இறுதி ஆட்டமும் நினைவஞ்சலிக் கூட்டமும் நாளை ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் உள்ள குமரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

## தப்பிய ஜே.வி.பி. நபர் சிக்கினார்

மகஸின் சிறையில் இருந்து வேறு சில கைதிகளுடன் தப்பிச் சென்ற ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய தீவிரவாதி ஒருவர் பாணந்துறையில் வைத்து கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அந்த நபர் பாணந்துறையில் உள்ள தேநீர்க்கடை ஒன்றில் பொய்யான பெயருடன் வேலை செய்து வருவதாகக் கிடைத்த தகவலை தொடர்ந்தே அவர் கைதானார் என்று கூறப்பட்டது.

## புலிகளின்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

னால் கைப்பற்றப்பட்டன. வடக்கு-கிழக்கில் பல இடங்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ளதாலும் படையினருக்கு பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாலும் ஸ்ரீலங்கா அரச உயர் மட்டத்திலும் இராணுவத் தலைமைப்பீடத்திலும் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இராணுவத்தினரின் போர் ஆயத்தங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதேசமயம் சிங்கள இராணுவத்தினரின் மன உறுதியும் தளர்ந்துள்ளது.

இராணுவத்தினர் போர் திட்டங்களை மறுபரிசீலனை செய்து புதிதாக வகுக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தி உள்ளதாகவும் அவதானிகள் தெரிவித்தனர்.

## கர்நாடகத்தில்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

23 ஆம் திகதி நள்ளிரவில் வெடிகுண்டு வைக்கப்பட்டது. அதனால் வீட்டின் முன்புறத் தூண் சேதமடைந்தது.

அமைச்சர் ரமேஷ் மைசூர் பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும் இவரது மனைவி தமிழ் சினிமாப் படம் தயாரித்து வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்திற்கும் காவிரி நீர்த்தகராறுக்கும் தொடர்புண்டா என்பது பற்றி பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்,

[ஒ-எ]

## பிரபாவையும்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

லும் இந்த விளம்பரம் இடம்பெற வேண்டும் என்றும் திரு. பிரபாகரனும் திரு. பொட்டு அம்மானும் இறுதியாகத் தங்கியிருந்த வீட்டில் இந்தப் பிரகடன ஆணை வார்த்தைகள் அடங்கிய சுவரொட்டி [illegible] றும் நீதிபதி [illegible] ஓம் லும் ஆணையிட்டிருக்கிறார்.

(அ-எ)

# தங்கம் கடத்த முயன்ற லொறி பிடிபட்டது!

## வவுனியாவில் சம்பவம்

லொறியில் மறைத்து வைத்து, பெரும் தொகையான தங்கக்கட்டிகள், நகைகள், டோர்ச் பற்றரிகள், சைக்கிள் குண்டுகள், போட்டோஸ்ரற் இயந்திரப் பவுடர் போன்றவற்றை வடபகுதிக்குக் கொண்டு செல்ல எடுக்கப்பட்ட முயற்சியை வவுனியா சர்வோதயத் தடை முகாமில் வைத்து இராணுவப் பொலீஸார் கடந்த புதனன்று கண்டு பிடித்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அனுமதிப் பத்திரத்துடன் மண்ணெண்ணெய் நிரப்பிக் கொண்டு கிளிநொச்சி செல்லவிருந்த இந்த லொறியின் அடிப்பாகத்தில் புதிதாக இணைக்கப்பட்ட பெட்டி ஒன்று இருப்பதைக் கண்டு இராணுவப் பொலீஸார் சந்தேகம் கொண்டனர் என்றும்—

அப்பெட்டியைச் சோதனையிட்ட போது ஒவ்வொன்றும் 14 பவுண் எடை கொண்ட 10 தங்கக்கட்டிகள், 56 சிங்கப்பூர் தங்கச் சங்கிலிகள், 72 சோடி பற்றறிகள், 80 சைக்கிள் குண்டுப் பெட்டிகள், போட்டோஸ்ரற் இயந்திரத்துக்குரிய பவுடர் அடங்கிய 4 பெட்டிகள் என்பன கண்டு பிடிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது;

கொழும்பில் உள்ள தமிழ் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான இந்த லொறியை வவுனியாவில் வைத்து படையினர் சோதனையிட்ட சமயம் அதன் சாரதி தப்பி ஓடிவிட்டதாகவும், கிளீனர் படையினரிடம் மாட்டிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட பொருள்களின் பெறுமதி சுமார் ஒரு கோடி என்று கொழும்பு சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டது. [உ-எ-10]

### உணவு முத்திரை பெறும் மாணவர் விவரம்:

# 5ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 1

ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் திகதிக்கு முன்பாக அதற்கு முந்திய மாதத்துக்குரிய மதிய உணவு முத்திரைகளைப் பெறும் மாணவர்களின் சரியான விவரங்களை பாடசாலை அதிபர்கள் உரிய இடங்களில் சமர்ப்பித்து விட வேண்டும்.

பாடசாலை மாணவர்களின் உணவு முத்திரைகளைப் பெற்று வழங்குவதில் ஏற்பட்டுள்ள நடைமுறைப் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக நேற்று நல்லூர் சாதனா பாடசாலையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட சமூக சேவை பகுதி ஆணையாளர், கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர்.

# ஈழத்தமிழ் அகதிகளில் 28 பேர் வவுனியா முகாமில்

கொழும்பு, பெப். 1

தமிழ்நாட்டில் இருந்து திரும்பிய முதல் தொகுதி ஈழத் தமிழ் அகதிகளில் பன்னிரண்டு குடும்பங்கள் வவுனியாவில் உள்ள எல்லப்பர் மருதங்குள அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணியளவில் இக் குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் திருகோணமலையில் இருந்து பொலீஸ் பாதுகாப்புடன் வவுனியா சென்றடைந்தனர்.

வவுனியாப் பகுதியைச் சேர்ந்த 5 குடும்பங்களில் உள்ள 14 பேரும், முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 4 குடும்பங்களில் உள்ள 10 பேரும் கிளிநொச்சியைச் சேர்ந்த 2 குடும்பங்களில் உள்ள 3 பேரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் இவர்களில் அடங்குவர்.

# வெகுசன போராட்டக்குழு தொடர் கலந்துரையாடல்

எதிர்வரும் ஐந்தாம் திகதி யாழ். செயலகத்தின் முன்பாக நடத்தப்படவுள்ள மறியற் போராட்டம் சம்பந்தமாக பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல்களை வெகுசன போராட்ட அமைப்புக் குழுவினர் நடத்தி வருகின்றனர்.

நேற்று இவர்கள் யாழ் நகர கரையோரப் பகுதி மீனவர் அமைப்புக்களுடனும் சன சமூக நிலையங்களின் பிரதிநிதிகளுடனும், பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் என்பனவற்றுடனும்ன் கலந்துரையாடினர்.

இன்றும் இது போன்ற கலந்துரையாடல்களை இவர்கள் நடத்தவுள்ளனர். [இ-5]

# ஜப்பானின் ஆதரவை திரட்ட பிரட்மன் அங்கு பயணம்!

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கூன் சில தினங்களுக்கு முன்னர் ஜப்பான் பயணமானார்.

பாரிஸில் இம்மாதம் 7, 8 ஆம் திகதிகளில் நடைபெற உள்ள இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் தொடர்பாகவே திரு. பிரட்மன் வீரக்கூன் ஜப்பான் சென்றார் என்று ராஜதந்திர வட்டாரங்கள் கூறின.

இலங்கைக்கு கூடுதல் உதவி பெறுவதற்காக ஆதரவைத் திரட்டவே அவர் அங்கு செல்கிறார் என்று கருதப்படுகிறது.

(உ-எ)

## திறப்பு விழா

குருநகர், பெப். 1

யாழ். திருமறைக் கலாமன்றம், நாடகப் பயிலகம் ஒன்றை இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பிக்க உள்ளது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் ( பிறைவேட் ) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 1-2-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org